நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பூ விலை உயர்வு; கனகாம்பரம் கிலோ ரூ.800**

First Published : 19 Nov 2011 05:01:13 AM IST



பண்ருட்டி,நவ.18: மழை மற்றும் விளைச்சல் குறைவு காரணமாக பூக்களின் வரத்து குறைந்துள்ளது. இந்த நிலையில் இப்போது பூக்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால் அவற்றின் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.800-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, தட்டாம்பாளையம் (அரும்பு), வேகாக்கொல்லை, வெள்ளப்பாக்கம், ராமாபுரம், ஒதியடிக்குப்பம், கீரப்பாளையம், எஸ்.புதூர், ஆயிப்பேட்டை, வெங்கடாம்பேட்டை, பாச்சாரப்பாளையம், கன்னித்தமிழ்நாடு உள்ளிட்ட பகுதிகளில் கனகாம்பரம், குண்டு மல்லி, ரோஜா, அரும்பு, காக்கரட்டான், சாமந்தி ஆகிய பூக்கள் விளைவிக்கப்படுகிறது. இப்போது பெய்து வரும் கனமழை காரணமாக பூக்களின் உற்பத்தி குறைந்துள்ளது. இதுகுறித்து பண்ருட்டி வி.கே.என்.புஷ்ப மண்டி உரிமையாளர் வி.கே.என்.குமார் கூறியது:

மழையால் உற்பத்தி குறைந்துள்ளது. அதே நேரம், சபரிமலை சீசன் தொடங்கியுள்ளதாலும், முகூர்த்த நாள்கள் காரணமாகவும் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் அனைத்து ரக பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது.

கிலோ ரூ.400-க்கு விற்ற கனகாம்பரம் ரூ.800-க்கு இப்போது விற்கப்படுகிறது. அதேபோல, ரூ.100 விற்ற அரும்பு மற்றும் மல்லி ரூ.300-க்கும், ரூ.20-க்கு விற்பனையான ரோஜா ரூ.50-க்கும் விற்பனையாகிறது.

இன்னும் ஒரு வாரத்தில் கனகாம்பரம் கிலோ ரூ.1,000-யும், அரும்பு, மல்லி ரூ.400-யும் தாண்டும் என் வி.என்.குமார் கூறினார்.

**பயிர்க் காப்பீடு இழப்பீட்டை விவசாயிகளுக்கு உடன் வழங்க வலியுறுத்தல்**

First Published : 19 Nov 2011 02:41:48 PM IST

நாகப்பட்டினம், நவ. 18: விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு இழப்பீடு வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் ஏ.கே.எஸ். விஜயன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி, மானிய விலையில் விவசாயக் கருவிகள், இடுபொருள்கள், வட்டியில்லா கடன் உள்பட பல்வேறு சலுகைகளை திமுக அரசு வழங்கியது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளால் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளைப் பயிர்க் காப்பீடு செய்ய வைத்து, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடனடியாக காப்பீடு இழப்பீடு கிடைக்கவும் திமுக அரசு ஏற்பாடு செய்தது.

கடந்த 2006- 07-ம் ஆண்டு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீடு இழப்பீடு தொகையில், தமிழக அரசின் பங்களிப்பான 50 சத தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க திமுக அரசு உத்தரவிட்டது.

மத்திய அரசின் பங்குத் தொகையான மீத 50 சதத் தொகையை மத்திய அரசு விடுவிக்க அப்போது காலத் தாமதம் ஏற்பட்டது. இந்தக் காலத்தாமதத்தால் விவசாயிகள் பாதிக்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசின் பங்களிப்புத் தொகையையும் மாநில அரசே வழங்கும் என அறிவித்து, வழங்கியது திமுக அரசு.

ஆனால், தற்போது பயிர்க் காப்பீடு இழப்பீடு கிடைக்காமல் செய்வதறியா நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் விவசாயிகள்.

2008- 09-ம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் உளுந்து, பயறு சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. இதற்குக் காப்பீடு இழப்பீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மத்திய அரசின் பங்களிப்புத் தொகை கடந்த மே மாதம் வழங்கப்பட்டது. ஆனால், மாநில அரசின் 50 சத பங்களிப்புத் தொகை இதுவரை வழங்கப்படவில்லை. இதனால், விவசாயிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

விவசாயிகளின் நலன் கருதி, பயிர்க் காப்பீடு இழப்பீட்டில் மாநில அரசின் பங்களிப்புத் தொகையை உடனடியாக விடுவித்து, விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல, 2010-11-ம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் நெல் பயிர்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின. இதனால், விவசாயிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. தனியாரிடமும், வங்கிகளிலும் கடன் பெற்ற விவசாயிகள், அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் உள்ளனர்.

எனவே, விவசாயிகளின் நலன் கருதி பயிர்க் காப்பீடு இழப்பீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**திருத்திய கரும்பு சாகுபடி முறை பயிற்சி முகாம்**

First Published : 19 Nov 2011 02:35:35 PM IST

அறந்தாங்கி, நவ. 18: அறந்தாங்கி அருகேயுள்ள குரும்பூர் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) சர்க்கரை ஆலை சார்பில், திருத்திய கரும்பு சாகுபடி ஒரு நாள் பயிற்சி குரும்பூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

குரும்பூர் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை வேளாண் அறிவியல் மையம், வம்பன் ஆராய்ச்சி நிலையம் இணைந்து கரும்பு விவசாயிகளுக்கான பயிற்சியை நடத்தின.

பயிற்சிக்கு வேளாண் அறிவியல் மைய இயக்குநர் சின்னையன் தலைமை வகித்தார். குரும்பூர் சர்க்கரை ஆலை தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன் பயிற்சியை தொடக்கிவைத்துப் பேசினார்.

இந்தப் பயிற்சியில் புதுகை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேளாண் விஞ்ஞானி நடராஜன் செம்மை கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார்.

லாபகரமான கரும்பு சாகுபடியில் இயந்திரமயம் குறித்து உதவிப் பொது மேலாளர் வி.ஆர். அருணாசலம் மற்றும் கரும்பு பயிற்சி மேலாளர் எம். வைரமுத்து ஆகியோர் செயல்விளக்கத்துடன் எடுத்துக் கூறினர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**யூரியா தட்டுப்பாடு 23ம் தேதிக்குள் சரி செய்யப்படும் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் அதிகாரிதகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:07 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் : ""மாவட்டத்தில் நிலவி வரும் யூரியா தட்டுப்பாட்டை வரும் 23ம் தேதிக்குள் சரி செய்யப்படும்" என விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் வேளாண் அதிகாரிகள் உறுதியளித்தனர். மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நேற்று கடலூரில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் நடந்தது. கலெக்டர் அமுதவல்லி தலைமை தாங்கினார். வேளாண் இணை இயக்குனர் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு: சர்க்கரை ஆலை அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது ரக கரும்புகளை பயிரிட கூறுகின்றனர். அவற்றில் சர்க்கரை சத்து அதிகமாக உள்ளதே தவிர அதிக விளைச்சல் இல்லாததால் இழப்பு ஏற்படுகிறது. அதனால், ஏற்கனவே பயிரிட்ட கரும்பையே தொடர்ந்து பயிரிட அனுமதிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். வெலிங்டன் ஏரி நிரம்பியுள்ளதால், ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என பெண்ணாடம் சோமசுந்தரம், கொத்தட்டை ஆறுமுகம் உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

விஜயகுமார்: பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களை சமீப காலமாக உள்ளூர் அரசியல் பிரமுகர்களே பொதுப்பணித்துறை அதிகாரிகள் போன்று பெயரளவிற்கு இரவோடு இரவாக தூர் வாருவதால் வெள்ளச் சேதம் அதிகரித்து வருகிறது. இதனை தவிர்க்க பாசன மற்றும் வடிகால் வாய்க்கால் சீரமைப்பு பணிகளை நீரினை பயன்படுத்தும் விவசாயிகளிடமே ஒப்படைக்க வேண்டும். ஜிங்க் சல்பேட் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கிள்ளை ரவீந்திரன்: பயிர் காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறும் விவசாயிகள் மற்றும் கடன் பெறா விவசாயிகளுக்கு பிரிமியத் தொகையில் வித்தியாசம் உள்ளது. இதனை மாற்றி அனைத்து விவசாயிகளின் மகசூலுக்கு விலை மற்றும் பிரிமியத்தை ஒரே அளவில் நிர்ணயிக்க வேண்டும்.

**உளுந்து சாகுபடியில்தொழில் நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,22:40 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டிவனம்:நல்லாவூர் உபவடி நீர்ப் பாசனப் பகுதியில் நீர் வள நில வளத் திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடியில் உயர் தொழில் நுட்ப பயிற்சி முகாம் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடந்தது.பேராசிரியர் சாத்தையா தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர்கள் வைத்திலிங்கம், பிரபு, ரேணுகா, உழவியல் துறை உதவி பேராசிரியர் ரமேஷ், இளநிலை ஆராய்ச்சியாளர் கள் ஆறுமுகம், பிரிதிவிராஜ் கலந்து கொண்டனர். தைலாபுரம்,ஒழிந்தியாபட்டு, இறையானூர், மொளசூர், ஆலங்குப்பம், ஓமிப்பேர் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

**சாகுபடி நேரங்களில் உரங்களை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் : விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:12 IST

விழுப்புரம் : விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் கலெக்டர் மணிமேகலை தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்தில் டி.ஆர்.ஓ., வெங்கடாசலம், வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் சிவமலர், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் ஜனகராஜன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விவசாயிகள் தரப்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதாவது: சாகுபடி சமயங்களில் யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., உள்ளிட்ட அத்தியவசிய உரங்கள் கிடைக்கவில்லை. உரங்களை வாங்கி கொடுக்க கூட்டுறவு வங்கிகள் அக்கறை காட்டுவதில்லை. சாகுபடி நேரத்தில் உரங்களை வழங்க வேண்டும். கரும்பு விவசாயிகள் சங்கத்தினரிடம் ஆலை நிர்வாகத்தினர் கலந்தாலோசிக்க வேண்டும். பதிவுத்துறை நிலங்களின் வழிகாட்டி மதிப்பை வெளியிட்டுள்ளது, முன்னதாக கிராமங்களில் விவசாயிகளிடம் கருத்து கேட்டிருக்க வேண்டும். பஞ்., கூட்டங்களில் இது போன்ற தகவல்களை தெரிவிக்க வேண்டும். மனு நீதி நாள் கூட்டங்களை நடத்திய கிராமங்களில் மீண்டும் நடத்தாமல் புதிய கிராமங்களில் நடத்த வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் கரும்பு, நகைக்கடன் தவிர விவசாய கடன் கள் தர மறுக்கின்றனர். சிறு விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க வேண்டும். நெல்லிற்கு உரிய விலை கிடைக்க கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும்.

மின்வெட்டினால் விவசாயம் பாதிக்கப்படுகிறது, ராஜிவ் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 39 ஆயிரம் விவசாய மின் இணைப்பில், 9 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டது. மீதமுள்ளதையும் விரைந்து வழங்க வேண்டும். மழைக்கால பாதிப்புகளை தடுக்க முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். வராகநதி சீரமைப்பு திட்டத்தில் முறைகேடு குறித்து பல முறை புகார் தெரிவித்தும் நடவடிக்கையில்லை. இவ்வாறு விவசாயிகள் தரப்பில் தெரிவித்தனர்.

கலெக்டர் மணிமேகலை மற்றும் அதிகாரிகள் பதிலளித்து பேசியதாவது: டான்பெட்டிலிருந்து உரங்கள் வாங்கி அனுப்பி வருவதால் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.வங்கிகளில் பயிர்க்கடன் வழங்க அறிவுறுத்தப்படும். காற்றாலை மின் உற்பத்தி இல்லாததால் தற்போது மின் வெட்டு உள்ளது, எனினும் 3 பேஸ் சப்ளை பாதிக்காமல் வழங்கப்படும். புதிய மின்மாற்றிகள் வரத்துள்ளதால், உடனுக்குடன் மாற்றித் தரப்படும். இதர கோரிக்கைகள் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**வேளாண் பல்கலை சார்பில் மரவள்ளி சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,23:45 IST

ஆத்தூர்: ஆத்தூர் அடுத்த ராமநாயக்கன்பாளையத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பில், மரவள்ளி சாகுபடி தொழில் நுட்பம் குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. ஆத்தூர் அருகே ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் நடந்த பயிற்சி முகாமை, ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் ராஜேந்திரன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். மேம்படுத்தப்பட்ட மரவள்ளி சாகுபடி திட்ட முதன்மை பயிற்சி அலுவலர் டாக்டர் ஜானகிராணி, மரவள்ளி சாகுபடி தொழில் நுட்பம் மற்றும் மகசூலை அதிகரிக்கும் யுக்திகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். முகாமில், மரவள்ளி நாற்றங்கால் அமைப்பு முறை குறித்து, டாக்டர் நாகேஸ்வரி, விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி அளித்தார். களை நிர்வாகம் மற்றும் உரமிடுதல் குறித்து, டாக்டர் ராஜா, கலாராணி ஆகியோரும், மரவள்ளி பயிர்களை அதிகளவில் பாதிக்கும் தேமல் நோய், கிழங்கு அழுகல் நோய் மற்றும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவது குறித்து, டாக்டர் ஜெயலட்சுமியும் பயிற்சி அளித்தனர். மரவள்ளி கிழங்குகளை சேமித்தல் மற்றும் அறுவடைக்கு பிந்திய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து, டாக்டர் செல்வராணி, கலைச்செல்வி ஆகியோர் செயல்விளக்க பயிற்சி அளித்தனர்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க மானியவிலையில் தீவன அபிவிருத்தி திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,04:12 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பால் உற்பத்தியை பெருக்க, அரசு மானியத்துடனான தீவன பயிர் அபிவிருத்தி திட்டங்கள் தொடங்கப்படுவதாக, கலெக்டர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கால்நடைகளின் பராமரிப்பு செலவினை குறைப்பதில், பசுந்தீவனம் ஒரு முக்கிய பங்காக உள்ளது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகை தீவனப் பயிர்களான சோளம், மக்காச்சோளம் போன்றவைகளுடன் அதிக புரதச்சத்து நிறைந்த வேலிமசால், முயல்மசால் மற்றும் தீவன வகை தட்டைப்பயறு போன்ற பயிர்களை இறவையிலும், மானாவாரியிலும் பயிர் செய்து, கறவை மாடுகளுக்கு கலந்து வழங்குவதன் மூலம் அடர் தீவனத்தின் தேவை குறைந்து, பால் உற்பத்திக்கான செலவினம் குறைந்து, கூடுதல் லாபம் விவசாயிகளுக்கு கிடைக்க வாய்ப்புள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயிகளின் வாழ்க்கை தரத்தினை சீராக மேம்படுத்தும் நோக்கத்துடன், கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி மற்றும் அதன் உபயோக மேலாண்மை குறித்தான திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் தீவனப் பயிர்கள் இறவையில் சாகுபடி கால் ஏக்கரில் செய்வற்கு, 2,590 ரூபாய் மானியமாக வழங்கப்படும். மானாவாரியில் கால் ஏக்கரில் தீவனச் சோளம் அல்லது தீவன மக்காச்சோளம் உடன் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்ய, 1,350 ரூபாய் மானியாக வழங்கப்படும்.தெளிப்பு நீர் பாசனக்கருகவிகள் நிறுவதற்கு, குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய், 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு, 18 ஆயிரத்து 750 ரூபாய், 75 சதவீத மானியத்திலும் வழங்கப்படும். கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில், 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். இதில் அதிகபட்சமாக, 6,375 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.மின்சாரத்தில் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில், 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். இதில் அதிபட்சமாக மானியம், 11 ஆயிரத்து 250 ரூபாய் வழங்கப்படும். தீவனப்புல் வெட்டும் கருவியின் மதிப்பில், 50 சதவீதமும், ஊறுகாய் புல் தயார் செய்வதற்கு, 30 ஆயிரம் ரூபாய், 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.இந்த திட்டங்கள் மூலம் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண் துறை சார்ந்த வேளாண்மை அலுவரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளித்து பயன்பெறலாம்.

**ஈரோட்டில் நெல் கொள்முதல் நிலையம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,23:41 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு, வைராபாளையத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் துவக்கப்பட்டது. பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் திறந்து வைத்தார். மாவட்ட கலெக்டர் சண்முகம், மேயர் மல்லிகா, துணை மேயர் பழனிச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏ., தென்னரசு, நுகர்வோர் வாணிபக் கழக மண்டல மேலாளர் சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அமைச்சர் ராமலிங்கம் பேசியதாவது: ஈரோட்டில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என, தலைமடை காலிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கம், இரண்டரை ஆண்டுகளாக கோரி வந்தது. இதையேற்று விற்பனை நிலையம் திறக்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இத்துடன் ஈரோடு மாவட்டத்தில் ஒன்பது நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகின்றன. நடப்பாண்டு 5,200 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார். அ.தி.மு.க., மாநகர செயலாளர் மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பட்டு வளர்ச்சி துறையின் புதிய தொழில் நுட்பம்,மல்பெரி மரம் நடவு முறைக்கு விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,02:31 IST

பொள்ளாச்சி:விளைநிலங்களில் வீணாக இருக்கும் பகுதிகளில் மல்பெரி மரம் நடவு செய்து பட்டுப்புழு வளர்க்கும் புதிய தொழில்நுட்பத்தை பட்டு வளர்ச்சித்துறையினர் செயல்படுத்தி வருகின்றனர். இந்த முறைக்கு பொள் ளாச்சி பகுதி விவசாயிகளிடையே வரவேற்பு கிடைத்துள்ளது.பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆண்டுதோறும் மல்பெரி செடி பயிரிட்டு பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்தாண்டு 757 ஏக்கராக இருந்த மல்பெரி சாகுபடி பரப்பு தற்போது 850 ஏக்கராக உயர்ந்துள்ளது.இந்தியாவில், பட்டு நூலின் தேவைக்கேற்ப உற்பத்தி இல்லாததால் பட்டுக்கூடுகளுக்கு நிலையான விலை கிடைத்து வருகிறது. மாநில அரசின் பட்டு வளர்ச்சி துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு மானியத்திட்டங்களும் செயல்படுத்தப்படுவதால் பலர் இத்தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், பட்டு வளர்ச்சி துறையினர் பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க தற்போது புதிய தொழில்நுட்பத்தை செயல்படுத்தி வருகின்றனர். விளைநிலங்களில் பிற சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டாலும் பயன்படாமல் இருக்கும் வேலி, வரப்பு ஆகிய பகுதிகளில் மல்பெரி செடிகளுக்கு மாற்றாக மரம் நட்டு பட்டுக்கூடுகளை வளர்ப்பதே புதிய தொழில்நுட்பமாகும்.மல்பெரி செடி சாகுபடி முறையில், ஆண்டுக்கு ஆறு முறை பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது; மரம் நடவு முறையில் குறைவான பராமரிப்பில் ஆண்டுக்கு நான்கு அறுவடை கூடுதலாக செய்யலாம். இம்முறையில் குறிப்பிட்ட நேரங்களில் பராமரித்தல், தண்ணீர் பாய்ச்சுதல் ஆகிய பணிகள் தேவைப்படாது.மல்பெரி செடி முறையில், ஒரு முட்டை தொகுதியிலுள்ள 450- 500 பட்டு புழுக்கள் வரை வளர்க்க 28 கிலோ தண்டுடன் கூடிய மல்பெரி இலைகள் உணவாக வழங்கப்படுகிறது. 100 முட்டை தொகுதிக்கு 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் புழுக்கள் வரை வளர்க்கப்படுகிறது. இதற்கு தண்டுடன் 3 ஆயிரம் கிலோ மல்பெரி இலை உணவாக வழங்கப்படுகிறது.புதிய தொழில்நுட்பமான மல்பெரி மர நடவு முறையை பின்பற்றினால், ஒரு மரத்திலிருந்து 25 கிலோ மல்பெரி தண்டுடன் கூடிய இலைகள் பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 700- 800 மரங்கள் வரை நடலாம்.ஒரு ஏக்கரில் மல்பெரி செடி பயிரிட்டு பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்வதால் மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் வரை குறைந்த பட்ச லாபமாக பெறப்படுகிறது. மரம் நடவு முறையில் குறைந்த பராமரிப்பு செலவு போன்ற காரணங்களால் 5 ஆயிரம் ரூபாய் வரை கூடுதலாக லாபம் கிடைக்கும்.

மல்பெரி மர நடவு முறை: மல்பெரி மர நடவிற்கு ஒரு அடி அகலம், ஒரு அடி ஆழத்தில் குழி தோண்டி அதில் 5 கிராம் "ப்யூரடான்' குருணை மருந்தை இரண்டு கிலோ தொழு உரத்துடன் கலந்து குழியில் போட்டு மரத்தை நடவு செய்ய வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. தரை மட்டத்தில் இருந்து ஐந்தரை அடி உயரம் வரை வளர்ந்த பிறகு அதனை வெட்டிவிட வேண்டும். 6- 8 மாதங்களுக்கு பிறகு இலை அறுவடை செய்யலாம்.

பட்டு வளர்ச்சித்துறையினர் கூறியதாவது: துறை சார்பில் ""ஒரு மல்பெரி மரம்; ஒரு முட்டை; அரை கிலோ பட்டுக்கூடு" என்னும் "ஸ்லோகன்' அடிப்படையாக கொண்டு இலக்கை எட்ட துறை இயக்குனர் பிரபாகரன் அறிவுறுத்தியுள்ளார். இலக்கை எட்ட மரம் நடவு முறை செயல்படுத்தப்படுகிறது.புதிய முறையில் பொள்ளாச்சி அடுத்த தென்சித்தூர், கம்பாலப்பட்டி, ஆண்டியூர், தேவனூர்புதூர், ஆழியார், மண்ணூர் போன்ற பகுதிகளில் 6 ஆயிரம் மரங்கள் நடப்பட்டுள்ளன. பட்டுப்

புழுக்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படாத வகையில் இந்த மர வளர்ப்பு அமையும்' என்றனர்.

**பசுந்தீவனம் வளர்க்க அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:33 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர்:கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறையை போக்க, பசுந்தீவனம் வளர்ப்புக்கு அரசு 100 சதவீத மானியம் வழங்க உள்ளது. திருப்பூரில் 3,000 பேருக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.கலெக்டர் மதிவாணன் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழகத்தில் கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறையை போக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 20 கோடி செலவில் 2,400 ஏக்கரில் பசுந்தீவனம் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படும். அவ்வகையில், கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் 25 சென்ட் பரப்பில் பயிரிட 2,590 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

மானாவாரியில் 25 சென்ட் பரப்பில் தீவனச்சோளம் அல்லது தீவன மக்காச்சோளம் உடன் தீவனத்தட்டை பயிர் விதைக்க 1,350 ரூபாய்; தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிக்கு குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு 25,000 (100 சதவீதம் மானியம்) இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம்; ஊறுகாய்ப்புல் தயார் செய்ய 30,000 ரூபாய் 100 சதவீதம் மானியம்; கையால்இயங்கும் புல் நறுக்கும் கருவிக்கு அதன் மதிப்பில் 75 சதவீத மானியம், அதிகபட்சம் 6350 ரூபாய்; மின் சக்தி இயந்திரத்துக்கு 75 சதவீத மானியம் அதிகபட்சம் 11,250 ரூபாய் மற்றும் தீவனப்புல் வெட்டும் கருவிக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சம் 12,500 ரூபாய் வழங்கப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் 3,000 பேருக்கு மானியம் வழங்கப்படும். விருப்பமுள்ள கால்நடை வளர்ப்போர், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண் துறை அலுவலரை தொடர்பு கொள்ளலாம், என்று தெரிவித்துள்ளார்.

**மானியத்துடன் தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்விண்ணப்பிக்க திருச்சி கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,05:05 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்சி: கால்நடைகளின் பராமரிப்புச் செலவை குறைப்பதில் பசுந்தீவனம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தான்ய வகை தீவனப்

பயிர்களான சோளம், மக்காச் சோளம் போன்றவைகளுடன் அதிக புரதச் சத்து நிறைந்த வேலி மசால், முயல் மசால் மற்றும் தீவன வகை தட்டைப்பயறு போன்ற பயிர்களை இறவையிலும், மானாவாரியிலும் பயிர் செய்து கறவை மாடுகளுக்கு கலந்து வழங்குவதின் மூலம் அடர் தீவனத்தின் தேவை குறைந்து பால் உற்பத்திக்கான செலவினம் குறைந்து கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கை தரத்தினை சீராக மேம்படுத்தும் நோக்குடன் கால்நடை பராமரிப்பு துறை மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மான்யத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி மற்றும் அதன் உபயோக மேலாண்மை குறித்தான கீழ்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.* அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பயிர் ஒட்டுப்புல் இரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் தீவனப் பயிர்கள் இறவையில் சாகுபடி 0.25 ஏக்கர் பரப்பில் செய்வதற்கு 2,590 ரூபாய் மான்யம் ஆகும்.* மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் அல்லது தீவன மக்காச்சோளம் உடன் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட 1,350 ரூபாய் மான்யம்.

தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் நிறுவுவதற்கு குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரம், இதர விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரத்து 750.* கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 50 சதம் மான்யத்தில் வழங்குதல் (அதிகபட்ச மான்ய ரூ.ஆறாயிரத்து 375.* மின்தியினால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 50 லட்சம் மண்டபத்தில் வழங்குதல்.* தீவனப்புல் வெட்டும் கருவியின் மதிப்பில் 50 சதம்.* ஊறுகாய் புல் தயார் செய்வதற்கு ரூ.30 ஆயிரம் 100 சதம் மான்யத்தில் வழங்குதல்.
மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண்மை துறை சார்ந்த வேளாண் அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டம் மற்றும் திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக வரும் 30ம் தேதிக்குள் விண்ணப்பம் அளிக்கவேண்டும்.இவ்வாறு கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**முயல் வளர்ப்பு இலவச பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,23:32 IST

மதுரை : கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பரங்குன்றத்தில் முயல் வளர்ப்பு இலவச பயிற்சி நாளை(நவ.21) நடக்கிறது. முயல் இனங்கள், தாக்கும் நோய்கள், கொட்டகை அமைப்பு, தீவன பராமரிப்பு இனப்பெருக்க பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள் பற்றி பயிற்சியளிக்கப்படும். காலை 10 மணி முதல் மாலை 5

மணி வரை பயிற்சி நடக்கும். போன் 0452-2483 903 அல்லது நேரில் பெயர்களை பதிவு செய்யலாம். தகவலை ஆராய்ச்சி மைய முதல்வர் பண்ணை முருகானந்தம் தெரிவித்தார்.

**நெல்பயிரை தாக்கும் பூச்சிகள்: கட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,02:04 IST

மதுரை: -நெல் பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயத் துறை உதவிஇயக்குனர் ராமநாதன் யோசனைகளை தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை: நெற்பயிரில் நாற்றங்கால் முதல் அறுவடை வரை பலவகை பூச்சிகள் தாக்குகின்றன. சாறு உறிஞ்சும் பூச்சிகள், பயிரை துளைத்து சேதப்படுத்துபவை, இலையை உண்டு சேதம் ஏற்படுத்துபவை என 3 வகையாக உள்ளன.சாறு உறிஞ்சும் பூச்சியான இலைப்பேன், நாற்றங்கால், நடவு வயல்களில் சேதப்படுத்தும். வறட்சி காலத்தில் பாதிப்பு அதிகமாக இருக்கும். இதற்கு வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் கரைசல் அல்லது புரோபனாபாஸ் 2 மி.லி.,(லிட்டருக்கு) என்ற அளவில் கலந்து தெளிக்கலாம்.புகையானை கட்டுப்படுத்த மோனோ குரோட்டோபாஸ் 500 மி.லி.,யை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூர் பகுதியில் படும்படி தெளிக்க வேண்டும். கதிர்நாவாய் பூச்சியை மாலத்தியான் அல்லது கார்பரில் மருந்தை ஒரு ஏக்கருக்கு 10 கிலோ தூவி கட்டுப்படுத்தலாம்.நெற்பயிரை துளைத்து சேதம் விளைவிக்கும் பூச்சிகளில் குருத்துப் பூச்சி முக்கியம். பயிரின் தூர்களை சேதப்படுத்தும் இவற்றை கட்டுப்படுத்த, விளக்கு பொறிகளை வைத்து தாய் அந்துப்பூச்சிகளை அழிக்கலாம். நடவு நட்ட 30, 37வது நாளில் டிரைக்கோ கிரம்மா ஒட்டுண்ணி அட்டை இரண்டு முறை, ஒரு ஏக்கருக்கு 2 சி.சி., வீதம் விட வேண்டும். இதே முறையில் ஆனைக் கொம்பன் ஈயையும் (இலை உறையை தாக்கும் பூச்சி) கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு"ஹெல்ப் லைன்' வசதிக்கும் ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:59 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை: மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு "ஸ்மார்ட் கார்டு, ஹெல்ப்லைன் வசதி' ஏற்பாடு செய்ய உள்ளதாக கலெக்டர் சகாயம் தெரிவித்தார். டி.ஆர்.ஓ., முருகேஷ், நேர்முக உதவியாளர் ஜெயசிங்ஞானதுரை, விவசாய துணை இயக்குனர் சம்பத்குமார் பங்கேற்றனர். விவாதம் வருமாறு:விவசாயி: வரிச்சியூர் கண்மாய், கால்வாயில் ஆகாயத்தாமரை ஆக்கிரமிப்பு உள்ளது.அதிகாரி: ஆகாய தாமரையை 3 கி.மீ., தொலைவுக்கு அப்புறப்படுத்த ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது. டி.ஆர்.ஓ: மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்மாய்களை சரிசெய்ய ரூ. 100 கோடி அளவுக்கு மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் கண்மாய், குளங்கள் சரிசெய்யப்படும்.விவசாயி: குளங்களை எந்த மாதிரி ஆழப்படுத்த போகிறீர்கள்?டி.ஆர்.ஓ.,: கரையை பலப்படுத்தல், தூர்வாருதல், மண்அடைப்பு சரிசெய்தல் போன்றவை செய்யப்படும்.விவசாயி: தூர்வாருதல் என்றால் எத்தனை அடி ஆழம் தோண்டுவீர்கள்?பொதுப்பணித்துறை அதிகாரி: தூர்வாரும் மண்ணை என்ன செய்வதென தெரியவில்லை. வைகை அணையை தூர்வாரும்போது செய்த தொழில்நுட்பத்தை கடைபிடிக்க வேண்டும்.

மற்றொரு விவசாயி: அது மண்அல்ல. வண்டல் மண். ஒரு கூடையே ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ளது. சேறான நிலையில் அதை வயல்களுக்கு பம்ப் செய்து நிலத்தை வளப்படுத்தலாம்.

விவசாயி: மீன்பிடி குத்தகைதாரர்கள் தங்கள் வசதிக்காக தண்ணீரை திறந்து விடுகின்றனர். இதனால் ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை.

கலெக்டர்: அப்படி செய்தால் தாசில்தார் மூலம் உடைப்பவர் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குளத்தை உடைத்தால் அது மீன்பிடிப்பவராக இருந்தாலும், அதிகாரியையும் சேர்த்து கிரிமினல் வழக்கு போடுங்கள்.கலெக்டர்: விவசாயிகள் கிராமத்தைவிட்டு வெளியேறி வருவதால் உணவு உற்பத்தி பாதிக்கும் என கருதியே, அரசு அனைத்து குளங்களையும் கணக்கெடுக்க உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் இப்படி செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.தண்ணீரை முறைப்படி பயன்படுத்த வேண்டும். அதை வெளியேற்றுபவர் குறித்து மனு கொடுங்கள். வாரம் ஒருமுறை சப் கமிட்டி அமைத்து அதை ஆய்வு செய்வோம். விவசாயிகளுக்காக நாங்கள் இனி இலவச போன் வசதி (டோல் பிரீ), ஹெல்ப்லைன் வசதி துவக்க உள்ளோம். இதுதவிர அவர்களுக்கென "ஸ்மார்ட் கார்டு' கொண்டு வரவும் எண்ணியுள்ளோம். அதில் அவர்களின் நிலம், சான்றுகள் என முழுவிபரமும் இருக்கும். விவசாய அதிகாரிகளை வாரம் ஒருமுறை 2 மணி நேரம் போனில் தொடர்பு கொண்டு குறைகளை தெரிவிக்கவும் ஏற்பாடு நடக்கிறது. அப்போது உடனுக்குடன் ஆய்வு செய்து குறைகளுக்கு தீர்வு கிடைக்கும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**கால்நடை தீவன சாகுபடிக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:47 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை: -கால்நடை தீவனம் சாகுபடிக்கு அரசு மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் சகாயம் தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை: கால்நடைகளின் பராமரிப்பு செலவை பசுந்தீவனம்

வெகுவாக குறைக்கிறது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தானியவகை தீவனப் பயிர்களான சோளம், மக்காச்சோளம் போன்றவற்றுடன், அதிக புரதச் சத்து நிறைந்த வேலிமசால், முயல்மசால் மற்றும் தீவின வகை தட்டைப்பயறு போன்றவற்றை இறவை, மானாவாரியில் பயிர் செய்யலாம். இதற்கு மானியம் வழங்கப்பட உள்ளது.
கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ 3 அல்லது கோ 4 இவற்றுடன், முயல்மசால், வேலிமசால் தீவன பயிரை இறவையில் சாகுபடி கால் ஏக்கர் பரப்பில் செய்ய ரூ. 2590 மானியம் வழங்கப்படும். மானாவாரியில் அதே ஏக்கர் அளவில் தீவன சோளம், மக்காச்சோளம் உடனவ் தீவன தட்டைப் பயறு சாகுபடி செய்ய ரூ. 1350 மானியம், நீர்ப்பாசன கருவிகள் நிறுவ குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ. 25 ஆயிரம் (நூறு சதமானியம்) வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு ரூ. 18,750ம், கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில் 75 சதவீத மானியத்திலும் (அதிகபட்சம் ரூ. 6375), மின்சக்தியால் இயங்கும் புல்நறுக்கும் கருவிக்கு அதிகபட்சமாக ரூ. 12, 500 மானியத்திலும், தீவனப்புல் வெட்டும் கருவியின் மதிப்பில் 50 சதவீதம் (அதிகபட்சம் ரூ. 12, 500), ஊறுகாய்ப்புல் தயார் செய்ய ரூ. 30 ஆயிரம் (நூறு சதவீத மானியம்) வழங்கப்பட உள்ளது. விரும்புவோர், கால்நடை உதவி மருத்துவர் அல்லது விவசாய துறை சார்ந்த வேளாண்மை அலுவலரை தொடர்பு கொள்ளலாம், என தெரிவித்துள்ளார்.

**நெற்கதிர்களை தாக்கும் "குலை நோய் வேளாண்மைத்துறை எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2011,01:47 IST

கருத்தை பதிவு செய்ய
மதுரை : குளிர் காலத்தில் நெற்கதிர்களை தாக்கும் "குலை நோய்' வராமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும்," என மதுரை மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் வடிவேல்குமார் தெரிவித்தார்.அவர் கூறியதாவது: மதுரை மேற்கு வட்டாரத்தில் சம்பா, சாலடி பருவ நெல் சாகுபடி நடந்து வருகிறது. குளிர் காலம் என்பதால் நெற்கதிர்களை குலை நோய் தாக்க வாய்ப்புள்ளது. இந்நோய் தாக்கிய நெல் பயிரில் கண் வடிவில் புள்ளிகள் தென்படும். இது பெரிதாகி மகசூல் இழப்பு ஏற்படும். இந்நோயை கட்டுப்படுத்த "சூடோமோனாஸ்' எனும் உயிரியல் நோய் தடுப்பு மருந்து (ஒரு கிலோ ரூ.100) 10 கிராம் அளவில் 400 மி.லி., தண்ணீரை கலந்து ஒரு கிலோ விதையுடன் நேர்த்தி செய்ய வேண்டும்.நாற்றாங்காலில் 20 சென்ட் பரப்பளவில் நாற்றுகளை எடுப்பதற்கு ஒரு நாள் முன்னதாக 500 கிராம் சூடோமோனாஸ் மருந்தை இட வேண்டும். நடவு செய்தபின் மக்கிய தொழு உரத்தில் ஒரு ஏக்கர் வயலில் ஒரு கிலோ மருந்தை கலந்து வயலில் இட வேண்டும். 60, 70 மற்றும் 90வது நாட்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மருந்தை கலந்து தெளிக்க வேண்டும்.

இப்படி முறைப்படி மருந்து தெளிக்கும்போது நெற்கதிரில் குலை நோய் தாக்குதல் வராது. சூடோமோனாஸ் உயிரியல் நோய் தடுப்பு மருந்து என்பதால் பக்க விளைவுகள் இருக்காது. தேவையான மருந்து அனைத்து வேளாண் டிப்போக்களில் கிடைக்கும், என்றார்.